**செ.வெ.எண்.381/2017** **நாள் : 06.08.2017**

**காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் பேரூராட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் (TNUIFSL) சார்பில் சுற்றுலா பேரூராட்சிகளுக்கான போக்குவரத்து மேலாண்மை திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்றது.**

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் பேரூராட்சி அலுவலகத்தில் சுற்றுலா பேரூராட்சிகளுக்கான போக்குவரத்து மேலாண்மை திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் (TNUIFSL) சார்பில் L&T நிறுவனத்தினர் சுற்றுலா பேரூராட்சியான திருபெரும்புதூர் போக்குவரத்து மேலாண்மை திட்டம் குறித்து அறிக்கை சமர்ப்பித்து, விளக்கினார். அதில் போக்குவரத்து இடையூறுகளை கட்டுபடுத்துதல், பாதசாரிகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களுக்கான வசதிகள் மேம்பாடு , இதன் மூலம் அதிக அளவில் சுற்றுலா பயணிகளை ஈர்த்தல், அவர்களுக்கான சிறந்த வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் குடியிருப்போருக்கான கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற திட்டத்தின் நோக்கங்களை முன் வைத்தனர். பின்னர், போக்குவரத்து மேலாண்மையில் தற்போது உள்ள வடிவமைப்பு, அதில் உள்ள குறைபாடுகள் மற்றும் இடையூறுகளை விளக்கி, வருங்காலத்தில் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டங்களை திட்டமிட்டு, அதற்கான அறிக்கையை சமர்பித்து விளக்கினர்.

துறை வாரியாக அவரவர் கருத்துக்களை கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப அவர்கள் பேசும்போது, இத்திட்டத்தின் மூலம் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளுக்கான அனைத்து கால நிலைக்குமான திட்டம் தயாரித்தல், நிரந்தர மற்றும் தற்காலிக வாகன மேலாண்மை திட்டம் தயாரித்தல், திட்டச் செலவு மதிப்பீடு தயாரித்தல், நிதி ஆதாரங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் முறை போன்றவைகளை முன் வைத்து, L&T குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட காலம் என 3 திட்டங்களை திட்டமிட்டு கொடுத்துள்ளது. அம்மூன்று திட்டங்களுக்கான கருத்துரு தயாரிக்கப் பட்டத்தில், அதில் நடுத்தர திட்டத்தையே குறுகிய கால திட்டமாக விரைந்து செயல்படுத்தவும், நிதி ஆதாரங்கள் நாடாளுமன்ற-சட்ட மன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்று செய்யலாம் என்றும், நெடுஞ்சாலை துறையினர் செயல்படுத்தும் சாலை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதி உதவி கோர அரசுக்கு கருத்துரு அனுப்பலாம் என்றும் கூறினார். மாநில நெடுஞ்சாலை துறையின் மூலம் SH 57, SH 110 சாலைகளை நான்கு வழிச்சாலைகளாக மாற்றும் திட்டம் குறித்து மாநில நெடுஞ்சாலை துறை பொறியாளரை கேட்டறிந்தார். திருப்பெரும்பூதூர் சுங்க கட்டணம் மையத்தில் தொழிற்சாலையின் வாகனங்களுக்கு நுழைவு சுங்க கட்டணம் ஓசூர் சுங்க கட்டண மையத்தின் மாதிரியில் செயல்படுத்த ஆலோசனை வழங்கினார். பிள்ளைப்பாக்கம் - உயர்நிலைப்பள்ளி வரையிலான சாலையினை சீரமைக்க நெடுஞ்சாலை துறைக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் திருபெரும்புதூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு.கே.பழனி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மனோகரன், போக்குவரத்து துறைகளின் அலுவலர்கள், திட்ட கமிட்டியின் உறுப்பினர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**செய்தி வெளியிடுபவர்**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.